துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் கோயமுத்தூர் அவர்களின் செயல்முறைஆணை
பிறப்பிப்பவர்: மரு G.ரமேஷ்குமார், ,எம்.பி.பி.எஸ்.டி.பி.எச்.,

மூ.மு.எண்.4744/அ5/2020 நாள்:21/08/2020

பொருள் : பணியாளர் தொகுதி - பொது சுகாதாரம் -திரு.எஸ்.ராஜேந்திரவேல், இளநிலை உதவியாளர், ஆரம்ப சுகாதார நிலையம், நெகமம் - பணிவரன்முறைப் படுத்துதல் ஆணை - வழங்கப்படுகிறது.

பார்வை : வட்டார மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், நெகமம் கடித ந.க.எண்: 52/2019/அ2, நாள்: 15.07.2020.

---

**ஆணை:-**

தமிழ்நாடு அரசுப்பணிகள் (பணிநிபந்தனைகள்) சட்டம்-2016, சட்டப்பிரிவு 28(I)-ன்படி திரு.எஸ்.ராஜேந்திரவேல், இளநிலை உதவியாளர், ஆரம்ப சுகாதார நிலையம், நெகமம், அவர்களின் தற்காலிகப்பணி 08.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு ஆணை வழங்கப்படுகிறது.

இவரது பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாளான 08.03.2019 முற்பகல் முதல் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் அமர்த்தப்படுகிறார். மேலும் அடிப்படை விதி எண். 28(I)-ன்படி இவர் பணியில் இணைந்த நாள் முதல் ஊதிய உயர்வு மற்றும் இதரப்படிகள் பெற்றுக்கொள்ள தகுதியுடையவராகிறார்.

இது தொடர்பான தக்க பதிவுகள் அன்னாரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதென, சான்றளிக்கப்படுகிறது.

துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள்
கோயமுத்தூர்.

பெறுதல்:
திரு.எஸ்.ராஜேந்திரவேல் , இளநிலை உதவியாளர், ஆரம்ப சுகாதார நிலையம், நெகமம்,
(வட்டார மருத்துவ அலுவலர் , ஆரம்ப சுகாதார நிலையம், நெகமம் மூலமாக)

நகல்:
வட்டார மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், நெகமம்.

நகல்சமர்ப்பிக்கப்படுகிறது:
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, சென்னை-6.

Scanned with CamScanner